# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**<u>ஆணை நாள் – 17.04.2025</u>**

**<u>முன்னிலை</u>**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**<u>வழக்கு எண். SA 603/SCIC/2023</u>**

திரு.க.துரை திருநாவுக்கரசு — மேல்முறையீட்டாளர்
7, நத்தப்பாளையம் (அஞ்சல்)
மூலனூர் - 638 106
தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர்,
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
டாஸ்மாக் லிட், திருப்பூர் ... பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

1.மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 23/12/2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார் “பொருள்- திருப்பூர் மாவட்டம், தாராபும் வட்டம், தூரம்பாடி கிராமம் புல எண்.206/1 நத்தப்பாளையம் மதுபானக்கடை எண்.3999 - தொடர்பாக - திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப. அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.15257/2020/கலால்-2 படிக்க - (1) அரசாணை (பல்வகை) எண்.32 உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை (IV) நாள் 21.05.2018 .” என்பன போன்ற தகவல்களை 4 (நான்கு) இனங்களில் மொத்தம் 16 (உட்பிரிவுகளுடன்) வழங்கக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1685/2022/அ1, நாள் 04/11/2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளார்.

2. பின்னர், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் பிரிவு 19(1)-ன் கீழ் 31/12/2022 தேதியிட்டு தனது முதல் மேல்முறையீட்டு மனுவினை அனுப்பியுள்ளார். அதன்பின்னர், மனுதாரர் / மேல் முறையீட்டாளர் 10/01/2023 தேதியிட்டு பிரிவு 19 (3)-ன்கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 603/SCIC/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மனுதாரர் கோரிய தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 17/03/2023 தேதியிட்ட ஆணையத்தின் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டிருந்தது. பின்னர், பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட மேலாளர், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், திருப்பூர் அவர்கள் மனுதாரருக்கு ந.க.எண்.1685/2022/அ1, நாள் 22/10/2024 வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதோடு, அதன் விவரத்தை ஆணையத்திற்கும் தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மனுதாரர் 23/12/2024 தேதியிட்டு ஆணையத்திற்கு ஆட்சேபணை கடிதம் அனுப்பியுள்ளார்.

3. இந்நிலையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின்மீது காணொளி காட்சி மூலம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 17/04/2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தின் முன் நேரடியாக ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

**4. இன்றைய காணொளி காட்சி விசாரணையில் மனுதாரர் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கலந்து கொண்டார். விசாரணைக்கு ஆணையத்தின் முன் பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு.வே.பண்டரிநாதன், மாவட்ட மேலாளர், டாஸ்மாக் லிட், திருப்பூர் அவர்கள் ஆஜரானார். மனுதாரர் 23/12/2024 தேதியிட்ட தனது ஆட்சேபணை கடிதத்தில் இனம் 5-ல் உட்பிரிவு 1, இனம்-4-ல் உட்பிரிவு 2, இனம் 3-ல் உட்பிரிவு 3 ஆகியவை சரியானதாக இல்லை எனத் தெரிவித்துள்ளார். 04/11/2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்து, மனுதாரரின் கூற்றினை ஏற்கிறது.**

**5. எனவே, பொதுத் தகவல் அலுவலர் மேற்குறிப்பிட்ட இனம் 5-ல் உட்பிரிவு 1, இனம்-4-ல் உட்பிரிவு 2, இனம் 3-ல் உட்பிரிவு 3 ஆகியவற்றிற்கான விவரங்கள் / தகவல்கள் / நகல்களை, எந்த அலுவலகத்தில் உள்ளதோ,**

**அங்கிருந்து அவற்றைப் பெற்று, அதனை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், மனுதாரரிடமிருந்து பெறக் கூடிய அஞ்சல் ஒப்புகை அட்டையின் நகலை ஆணையத்தில் 15/05/2025 அன்று பிற்பகல் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 603/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர்,
தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம்
டாஸ்மாக் லிட், திருப்பூர்

**மேல்முறையீட்டாளர்**
திரு.க.துரை திருநாவுக்கரசு
7, நத்தப்பாளையம் (அஞ்சல்)
மூலனூர் - 638 106
தாராபுரம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.

RG/PC